Crl.Misc.39

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

CC No.416/2022

| | | |
|---|---|---|
| | | Prosecution PW-1 |
| Deposition of Witness for | | Defence |
| | | Court |
| Name | : | கார்த்திகேயன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

**எதிரி ஆஜர்.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of **21.07.2023**

**முதல் விசாரணை**

நான் அண்ணா நகர், முதல் தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் லோடு மேனாக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். விமல், ஆறுமுகம், சதீஸ், தினேஷ் ஆகியோர்கள் எனது நண்பர்கள் ஆவார்கள். கடந்த 29.07.2018 ஆம் தேதி அண்ணா நகர் 4 ரோட்டில் நின்று கொண்டிருந்தோம். ஆஜர் எதிரி அங்கு மதியம் சுமார் 02.30 மணியளவில் வந்து எனது நண்பர் விமலை கிண்டலாக

**s/d. K. Ambiga**

**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்.**

பேசினார். அதை நான் கேட்டேன். அப்போது அதைக் கேட்டதற்கு ஆஜர் எதிரி ஏன்டா தேவடியா புண்ட மவனே, நீ என்ன சப்போட்டா என்று கேட்டார். அருகில் இருந்த நண்பர்கள் பேசி கோபியையும் என்னையும் அனுப்பி வைத்தனர். நாங்கள் சென்றுவிட்டோம். அன்றைய தினம் இரவு சுமார் 08.45 மணியளவில் கௌரிபுரம், கங்கா பார்சல் சர்வீஸில் தெரிந்தவரைப் பார்ப்பதற்காக நான், ஆறுமுகம், சதீஸ், தினேஷ் ஆகியோர்கள் சென்றிருந்தோம். அப்போது ஆஜர் எதிரி அங்கு அருவாளை எடுத்து வந்து என்னை ஏன்டா தேவடியா புண்ட மவனே என்னை திட்டி இப்ப வாடா பார்க்கலாம் என்று திட்டி அருவாளால் வெட்ட வந்தார். அப்போது தடுத்தபோது இடது கையில் வெட்டுப்பட்டது. சாட்சி தனது இடது கையில் உள்ள வெட்டுக்காயத் தழும்பை காண்பித்தார்) சம்பவத்தை பார்த்த ஆறுமுகம் தடுக்க வந்தபோது, அவரை தலை, கை, காது, இடது கை கட்டை விரலிலும் வெட்டிவிட்டார். அதனால் ஆறுமுகத்திற்கு விரல் துண்டாகிவிட்டது. பின்னர் எதிரி எங்களைப்பார்த்து இன்று தப்பித்துவிட்டீர்கள். என்னைக்கா இருந்தாலும் உங்களைக் கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி அருவாளுடன் ஓடிவிட்டார். பின்னர் காயமடைந்த எங்களை தினேஷ் ஆம்புலன்ஸ் மூலம் கரூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தார். மறுநாள் காலை போலிசார் என்னை வந்து விசாரித்தனர். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது. அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**s/d. K. Ambiga**

**நீதித்துறை நடுவர் எண்.1,கரூர்.**

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

CC No.416/2022

| | |
|---|---|
| | Prosecution PW-2 |
| Deposition of Witness for | Defence |
| | Court |

| | | |
|---|---|---|
| Name | : | ஆறுமுகம் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

**எதிரி ஆஜர்.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of **21.07.2023**

**முதல் விசாரணை**

1) நான் புலியூர், ஆசிரியர் காலணியில் குடியிருந்து வருகிறேன். நான் எலக்ட்ரீசியன் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். விமல், சதீஸ், தினேஷ் ஆகியோர்கள் எனது நண்பர்கள் ஆவார்கள். கடந்த 29.07.2018 ஆம் தேதி அண்ணா நகர் 4 ரோட்டில் நின்று அ.சா.1 மற்றும் எனது

**s/d. K. Ambiga**

**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்.**

நண்பர்களுடன் பேசிக்கொண்டிருந்தோம். ஆஜர் எதிரி அங்கு மதியம் சுமார் 02.30 மணிக்கு மேல் இருக்கும். அப்போது அங்கு வந்து எனது நண்பர் விமலை கிண்டலாக பேசினார். அதற்கு வாக்குவாதம் ஏற்பட்டது. அதை அ.சா.1 கேட்டார். அப்போது ஆஜர் எதிரி அ.சா.1 ஐப்பார்த்து ஆஜர் எதிரி ஏன்டா தேவடியா புண்ட மவனே, நீ என்ன சப்போட்டா என்று கேட்டார். அப்போது நாங்கள் பேசி கோபியையும் அ.சா.1 ஐயும் அனுப்பி வைத்தோம். பின்னர் அன்றைய தினம் இரவு சுமார் 08.45 மணியளவில் கௌரிபுரத்தில் உள்ள கங்கா பார்சல் சர்வீஸில் உள்ள ஒருவதைப் பார்ப்பதற்காக அ.சா.1 உடன் நான், தினேஷ், சதீஸ் ஆகிய நால்வரும் சென்றிருந்தோம்.

2) அப்போது ஆஜர் எதிரி அருவாளுடன் அங்கு வந்து இப்ப வாங்கடா தேவடியா புண்ட மவனே என்று திட்டி அ.சா.1 ஐ வெட்டமுற்பட்டபோது அவர் தனது இடதுகையால் தடுத்ததில், அவருக்கு இடது கை மணிக்கட்டில் வெட்டுக்காயம் ஏற்பட்டது. அதைப் பார்த்த நான் தடுக்க சென்ற என்னை கோபி இடது நெற்றி, இடது கை கட்டைவிரல், இடது காது ஆகிய இடங்களில் வெட்டினார். அதில் எனக்கு இடது கை கட்டைவிரல் கட்டாகிவிட்டது. (சாட்சி தனது இடது கை கட்டைவிரல் வெட்டுப்பட்ட இடத்தை காண்பித்தார்). பின்னர் தினேஷ் மற்றும் சதீஷ் ஆகியோர் கோபியை விரட்டி பிடிக்க முற்பட்டபோது எதிரி இப்போது தப்பித்துவிட்டீர்கள். என்னைக்கா இருந்தாலும் உங்களைக் கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிவிட்டு அருவாளுடன் சென்று விட்டார். பின்னர் காயமடைந்த எங்களை தினேஷ் ஆம்புலன்ஸ் மூலம் கரூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தார். மறுநாள் காலை போலிசார் என்னை வந்து விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**s/d. K. Ambiga**

**நீதித்துறை நடுவர் எண்.1,கரூர்.**